**Starting Time : 3.17.p.m.**

**30.06.2025 அசல் வழக்கு எண்.132/2003 மற்றும் அசல் வழக்கு எண்.11/2007**

**பி.வா.சா.3 திருமதி. ஜோதி க/பெ. பெருமாள்.**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, அசல் வழக்கு எண்.132/2003ன் வாதிகள் தரப்பில் மற்றும் அசல் வழக்கு எண்.11/2007-ன் 3 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விவசாயம் செய்து வருகிறார். எத்தனை ஏக்கர் சொத்துக்கள் இருக்கும் என்றால் சுமார் 5 ஏக்கர் இருக்கும். அதில் 2 கிணறு, 2 பம்புசெட் உள்ளது என்றால் சரி தான். என்ன வகையான வீடு என்றால் மெத்தை வீடு ஆகும். இதை தவிர வேறு ஏதேனும் மனை உள்ளதா என்றால் இல்லை. வேறு ஏதும் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன், மூன்று பெண் மக்கள் ஆவார்கள். எனது மகன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் அரசு பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறார். மூன்று பெண்களையும் திருமணம் செய்துக் கொடுத்துவிட்டேனா என்றால் திருமணமாகிவிட்டது. ஓரளவு வசதியான இடத்தில் பெண் கொடுத்துள்ளேன். நான், எனது கணவர், எனது மகன், மருமகள் மற்றும் பேரன், பேத்தி உடன் தென்கரை கிராமத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் சாட்சி சொல்ல வந்துள்ள வழக்குடன் எத்தனை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. வழக்கு எண் என்ன என்றால் தெரியாது. இந்த வழக்குகள் யார் யார் இடையில் போடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கு சாட்சி சொல்ல நடராஜன் தான் அழைத்து வந்தாரா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் சொல்லி வந்தேன். தற்போது எனக்காக வழக்கை நடத்தும் வழக்கறிஞரை தவிர இதற்கு முன் வேறு ஏதேனும் வழக்கறிஞரை வைத்து வழக்கை நடத்தினேனா என்றால் இல்லை. நாராயணசாமி என்பவர் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நடராஜனை தெரியுமா என்றால் தெரியும். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கடம்பை கிராமத்தை சேர்ந்தவர். நடராஜன் (**அசல் வழக்கு எண்.11/2007 வழக்கின் வாதி**) எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா

என்றால் இல்லை. எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் கண்ணப் பிள்ளை (**காலமான 1ஆம் பிரதிவாதி**). எனது தகப்பனார் காலமாகி எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் இருக்கிறதா என்றால் உள்ளது. தற்போது கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் பெயர் என்ன என்றால் கண்ணம்மாள். அவர் உயிரோடு உள்ளாரா என்றால் எனது தகப்பனார் காலமாவதற்கு முன்பே என் தாயார் காலமாகிவிட்டார். எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. எனது பெற்றோர்களுக்கு நான் மட்டுமே ஒரே வாரிசு என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5வது வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார். எனக்கும் எனது கணவர் பெருமாளுக்கும் ஒரே வழக்கறிஞர் தான் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு வேறு வழக்கறிஞர் நியமித்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.11/2007ல் உள்ள வாதி நடராஜனுடன் எனக்கு ஏதேனும் விரோதமா என்றால் இல்லை. இந்த இரு வழக்கின் பிரதிவாதிகளான எங்களுக்கும் வாதிகளுக்கும் இடையே எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சொத்து விவரமும், எவ்வளவு விஸ்தீரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கடம்பை கிராமத்தில் உள்ளது. எனது தகப்பனாருக்கு கடம்பை கிராமத்தில் தட்டோடு வீடும், 1.68 சென்ட் நிலமும் உள்ளது. 1.68 சென்ட்டின் சர்வே எண், ஒவ்வொரு சர்வே எண்ணுக்கும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்திற்கு கிணறு பம்புசெட் இருக்கிறதா என்றால் தெரியாது. மேற்படி நிலத்திற்கும் வீட்டிற்கும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஒரே வாரிசாகிய என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. 1.68 சென்ட்டை தவிர வேறு ஏதேனும் நிலம் என் தகப்பனாருக்கு இருந்ததா என்றால் இல்லை. எனது தகப்பனார் வசித்து வந்த தட்டோடு வீட்டை வேறு யாருக்கேனும் கிரயம் செய்தேனா என்றால் நானும் என் தகப்பனாரும் சேர்ந்து மேற்படி வீட்டை எனது சித்தப்பா மகன் ஆறுமுகத்திற்கு

எழுதிக் கொடுத்துவிட்டோம். என்ன வகையான ஆவணம் செய்துக் கொடுத்தோம் என்றால் தானசெட்டில்மெண்ட் செய்துக் கொடுத்தோம். மேற்படி 1.68 சென்ட் நிலத்தை யாருக்கேனும் ஆவணம் செய்துக்கொடுத்தோமா என்றால் நடராஜன் (**அசல் வழக்கு எண்.11/2007வழக்கின் வாதி**) என்பவருக்கு கிரயம் செய்துக் கொடுத்தோம். அந்த சமயத்தில் எனது தகப்பனார் வயோதிகம் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் வைத்திய செலவிற்காக நானே நடராஜன் (**அசல் வழக்கு எண்.11/2007 வழக்கின் வாதி**) என்பவருக்கு கிரயம் ஆவணம் செய்துக் கொடுத்தேன். மேற்படி கிரய ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரய தொகை எவ்வளவு என்றால் ரூ.50,000/- கிரயம் செய்துக்கொடுத்தோம். மேற்படி பணத்தை யார் பெற்றது என்றால் நான் தான் பெற்றுக்கொண்டேன். மேற்படி பணத்தை எனது அப்பாவின் வைத்திய செலவிற்காக செலவு செய்தேன். எந்த வங்கியிலும் மேற்படி பணத்தை நான் வைப்பீடு செய்யவில்லை. மேற்படி நடராஜனிடமிருந்து பணம் ஏதும் பெறாமல் அசல் வழக்கு எண்.132/2003ன் வாதி நாராயணசாமி என்பவரை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக மறுபயன் ஏதும் பெறாமல் நடராஜனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சொத்துக்களை நடராஜனுக்கு விற்றுவிட்ட நிலையில், எதற்காக இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் நடராஜன் (**அசல் வழக்கு எண்.11/2007 வழக்கின் வாதி**) அழைத்ததால் வழக்கை நடத்தி வருகிறேன். சாட்சியமளிக்க வந்தேன். எனது கணவர் வழக்கு சம்பந்தமாக சாட்சியமளிக்க வருவாரா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள அக்ரிமெண்ட் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அக்ரிமெண்ட் யார் யாருக்கு இடையில் எவ்வளவு தொகைக்காக எப்போது போடப்பட்டது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாரும் நடராஜனும் (**அசல் வழக்கு எண்.11/2007 வழக்கின் வாதி**) சேர்ந்து அசல் வழக்கு எண்.122/2003 வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறதா முடிந்து விட்டதா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அதை பற்றி எனது தகப்பனாரோ, நடராஜனோ என்னிடம் தெரிவித்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் திரு.டி.ஜி. எழிலரசன் வழக்கறிஞர் மூலமாக எங்களுக்கு எதிராக

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு பின்னிட்டும் மீண்டும் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.)

Ending time : 03.56 p.m.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.